1984 மார்ச் 23]

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் வினாக்கள்-- விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, பட்ட மேல்படிப்பு (போஸ்ட் கிராஜுவேட்) படித்த டாக்டர்களை கூடிய அளவுக்கு அவர்களுடைய முழுத் திறமையையும் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய இடங்களில் நியமிக்கிறோம். உதாரணமாக டி.சி.எச். குவாலிஃபிக்கேஷன் உள்ளவர் இல்லாவிட்டால் எம். டி. குவாலிஃபிக்கேஷன் உள்ளவரை ஆரம்பச் சுகாதார நிலையங்களில் நியமிப்பதாக இருந்தால் அவர்களுடைய முழு திறமையையும் அங்கே பயன்படுத்த முடியாது. ஆகையால் மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் சொன்ன மாதிரி தாலுகா மருத்துவமனைகளில் அவர்களுடைய திறமை முழுவதையும் பயன்படுத்த வாய்ப்பு இருப்பதால் அங்கே அவர்களை நியமனம் செய்யலாம். ஆனால் அங்கே தான் நியமிக்க வேண்டுமென்று 'பிளாங்கட் ஆர்டர்' போட முடியாது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தின் அடிப்படையில் மீண்டும் செயல்பட வேண்டுமென்று அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்படும்.

பனை வாரியம் அமைக்கும் திட்டம்.

423—(*வினா எண். 18990) திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனை வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்த வாரியம் அமைக்கப்படுவதற்கு ஏற்கெனவே ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்தது. அது மத்திய அரசின் காதி கமிஷனுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். ஆகவே, மீண்டும் அந்த வாரியத்தை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 23

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவரவர்களே, மாநில பனை, தென்னை தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பாக இந்த கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. பனைத் தொழில்களுக்கு என்று தனி வாரியம் உருவாக்குவது என்பது பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு தேசீய அளவில் ஆய்வு செய்ய வேண்டிய ஒன்றாகும். அதற்கு ஏற்ப தமிழக அரசு இதுபற்றி பரிசீலனை செய்யும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, பனைத் தொழில் மையங்களை மாவட்டந்தோறும் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அப்படிப்பட்ட எத்தனை மையங்களை தமிழகத்தில் அமைக்க அரசு எண்ணியுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவரவர்களே, ஏற்கெனவே பனை பொருள் உற்பத்தி மையம் தமிழகத்தில் தற்போது தர்மபுரி மாவட்டத்திலுள்ள மாத்தூரிலும், புதுக்கோட்டையிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் மாதவரம் குமரபுரத்திலும் செயல்படுகின்றன. மேலும் தென்னாற்காடு மாவட்டத்தில் மா. புதூர், இராமநாதபுரம் மாவட்டத்தில் மானூர், வடஆற்காடு மாவட்டத்தில் மங்கலம் மாமண்டூர், திருநெல்வேலி மாவட்டத்தில் அந்தோணியார்புரம், மதுரை மாவட்டத்தில் கோவிலூர், கோவை மாவட்டத்தில் கிணத்துக்கடவு, சேலம் மாவட்டத்தில் ஜலகண்டபுரம் ஆகிய இடங்களில் பனைபொருள் மையங்கள் உருவாக்கப்பட இருக்கின்றன.

திரு. எஸ். என். இராமசாமி : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக பனை ஏறும் தொழிலாளர்களுக்கு கடன் வழங்கும்போது 20 பேர், 30 பேர்களைச் சேர்த்து வழங்குவதால் அந்தத் தொழிலாளர்களுக்கு அரசு மானியம கிடைக்காமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படி இருந்தால் ஒவ்வொரு தொழிலாளருக்கும் தனித்தனியாக கடன் வழங்க அரசிடம் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல் அரசின் கவனத்திற்கு இதுவரையில் வரவில்லை. இந்தக் கருத்து அரசின் கவனத்திற்கு வந்தபின்னால் அரசு ஆய்வு செய்யும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS